**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | **Case No.CC.23 of 2019** |
| **Preliminary Register** | : | |
| **Sessions** | : | |

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **Prosecution :** | **PW3** |
| | **Defence :** | |
| | **Court :** | |

**Name**/பெயர் :புகழேந்தி

**Father's/ Husband Name :** வீரபத்திரன்
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.12.2022.**

<u>முதல் விசாரணை</u>

நான் திருப்பட்டுரில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன், விபத்தில் இறந்துபோன கலியமூர்த்தியை தெரியும், கடந்த 14.12.2016 ம் தேதி நான் சொந்த வேலையாக எதுமலையிலிருந்து திருப்பட்டுருக்கு எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது கலியமூர்த்தி என்பவர் திருப்பட்டுரிலிருந்து எதுமலை ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி

சாலையின் இடதுபுறமாக TN 48 AA 9397 என்ற பதிவெண் ெ◌ காண்ட ஹீரோ ஹோண்டா ஸ்பெளண்டர் இருசக்கர வாகனத்தில் இரவு 7.40 மணியளவில் எதுமலை கவுண்டர் தெரு அருகில் வந்த போது எனக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தை வினு என்பவர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று கலியமூர்த்தி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது, கலியமூர்த்தியை நான் பார்த்த போது தலையில் காயம் ஏற்பட்டது, சம்பவ இடத்திலேயே அவர் இறந்துவிட்டார், விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை வினு என்பவர் ஓட்ட விஜய் என்பவர் அமர்ந்து கொண்டு வந்தார், அவர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தது, அருகில் இருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வினுவையும், விஜயையும் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம், கலியமூர்த்தி இறப்பு குறித்து போன் மூலமாக அவரது மனைவிக்கு தகவல் சொன்னேன், கலியமூர்த்தி 108 ஆம்புலன்ஸ் மூலமாக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டார், பிரேத பரிசோதனையின் போது நான் மருத்துவமனையில் உடன் இருந்தேன், விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணானது TN 49 Q 1510. சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தினை வினு என்பவர் தான் ஓட்டி வந்தார், அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும், வினு நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, மறுநாள் 15.12.2016 ம் தேதி போலிசார் என்னை விசாரித்தனர். எதிரியை அடையாளம் காட்டுவதற்காக 24.01.2023 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.